## சுருக்கம்

வேளாண்மை-உழவர் நலன் – தோட்டக்கலை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 - மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் 2025-26-இன் கீழ் பல்வேறு அறிவிப்புகள் மற்றும் பனை மேம்பாட்டு இயக்கத்தினை செயல்படுத்த ரூ.27.633065 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை

அரசாணை (நிலை) எண்.128

நாள்:19.05.2025.
திருவள்ளுவர் ஆண்டு 2056,
விசுவாவசு வருடம்,
வைகாசித் திங்கள் 05 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.66, வேளாண்மை-உழவர் நலத் (வஇபதி) துறை, நாள்:13.03.2024.
2. அரசாணை (நிலை) எண்.108, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:04.06.2024.
3. அரசாணை (நிலை) எண்.209, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:11.09.2024.
4. அரசாணை (நிலை) எண்.21, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்: 22.01.2025.
5. 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை 15.03.2025 அன்று மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.
6. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண்.மா.தி.2/5079/2025, நாள் 16.04.2025 மற்றும் 22.04.2025.

*******

**ஆணை:**

மேலே ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில், 2024-2025-ஆம் நிதி ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.3532.829 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

2. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று நடைபெற்ற 2025-26-ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட

அறிவிப்புகளுள் பின்வரும் அறிவிப்புகள் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளன.

**அறிவிப்பு எண் : 26**

**ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாட்டில் தென்னை 11 இலட்சத்து 65 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்படுகிறது. தென்னை மரங்களிலிருந்து தேங்காய், இளநீர், தேங்காய் எண்ணெய், தேங்காய்ப்பால், நீராபானம், தென்னை நார் போன்றவையும் பல்வேறு வகையான மதிப்புக்கூட்டுப் பொருட்களும் கிடைக்கின்றன.

"வைத்த பிள்ளையைப் பாதுகாத்தால், அது பெற்ற பிள்ளைக்கு உதவும்" என்ற சிறப்பு வாய்ந்த தென்னை சாகுபடியை ஊக்குவிக்க உழவர்கள் விருப்பத்தின்படி நெட்டை, நெட்டை X குட்டை, குட்டை X நெட்டை ஒட்டு இரகக் கன்றுகள் வழங்கப்படும். இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் ஒன்பதாயிரத்து 800 ஏக்கரில் செயல்படுத்த நான்கு கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், தென்னந்தோப்புகளில் அடுக்குமுறை சாகுபடியில் வாழை, ஜாதிக்காய், மிளகு போன்ற பலவகையான பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்து ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வருவாய் ஈட்டும் வகையில் உழவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். இத்திட்டம் எட்டாயிரம் ஏக்கரில், மூன்று கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

அண்மைக்காலமாக, தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல், பெரும்பாலான இடங்களில் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்தி, ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறையினை உழவர்கள் கடைப்பிடித்திடும் வகையில், மஞ்சள் ஒட்டுப் பொறி, ஒட்டுண்ணி அட்டைகள் போன்ற இனங்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் ஏக்கரில், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும், இதற்கென 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**அறிவிப்பு எண் : 29**

**பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி ஊக்குவிப்பு**

பாரம்பரிய காய்கறிகளை உண்பதன் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு, உழவர்கள் பாரம்பரிய காய்கறி இரகங்களைப் பெரும்பான்மையாகச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் வகையில், சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் மணப்பாறைக் கத்தரி, சில்லுக்கொடி கத்தரி, குலசை கத்தரி, பெரிய கொல்லம்பட்டிக் கத்தரி, தருவைத் தக்காளி, மஞ்சள் குடம் தக்காளி, ஆனைக்கொம்பன் வெண்டை, சிவப்பு வெண்டை, சிறகு அவரை, மூக்குத்தி அவரை போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய காய்கறி இரகங்களைச் சாகுபடி செய்வதை ஊக்குவிக்க இரண்டு கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 2,500 ஏக்கரில் பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி செய்யும் 7,000 உழவர்கள் பயனடைவார்கள்.

**அறிவிப்பு எண் : 31**

**தினசரி வருமானம் ஈட்ட மலர்கள் சாகுபடி**

i. காய்கறிகள், பழங்கள் சாகுபடி போலவே ஆண்டு முழுவதும் சீரான வருவாய் கொடுப்பது மலர் சாகுபடி. தினசரி மலர்களைப் பறித்து விற்பனை செய்வதன் மூலம் நிலையான தொடர் வருவாய் ஈட்ட முடியும். இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, மலர்கள் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு மானியம் வழங்க எட்டு கோடியே 51 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 6,200 ஏக்கரில் மலர்கள் சாகுபடி செய்யும் சுமார் 9,000 உழவர்கள் பயன்பெறுவார்கள்.

ii. **மல்லிகைக்கான சிறப்புத் திட்டம்**: பாரம்பரிய மலர்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த மல்லிகை மலரானது தமிழ்ப்பண்பாட்டில் சங்க காலத்திலிருந்தே தனக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ளது. "மதுரைக்கு மற்றுமோர் முகவரி தந்த மல்லிகை" தமிழ்நாட்டில் 42,000 ஏக்கரில் பயிரிடப்பட்டு இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மதுரை, தருமபுரி, திருவள்ளூர், சேலம், திண்டுக்கல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. மல்லிகை மலர் பெரும்பாலும் பூக்களாக விற்பனை செய்யப்படுகிறது. மல்லிகை, ஜாதிமல்லி ஆகியவை வாசனை எண்ணெய் பிரித்தெடுப்பதற்காகப் பயிரிடப்பட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 2025-2026ஆம் ஆண்டில் 3,000 ஏக்கரில், ஒரு கோடியே 60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஏழாயிரம் உழவர்கள் பயன்பெறும் வகையில் மல்லிகை சாகுபடி ஊக்குவிக்கப்படும்.

iii. **நறுமண ரோஜாவிற்கான சிறப்புத் திட்டம்**: தமிழ்நாட்டில் ரோஜா மலர்கள் 9,600 ஏக்கரில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம், திண்டுக்கல், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ரோஜா மலர் சாகுபடியினை ஊக்குவிக்க, ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**அறிவிப்பு எண் : 32**

**சுவைதாளிதப் பயிர்களுக்கான சிறப்புத் திட்டம்**

பண்டையக் காலம் முதல் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையோடு நறுமணப் பொருட்களின் பயன்பாடு, தொடர்ந்து வருகின்றது. இப்பொருட்கள் உணவிற்குச் சுவையூட்டுவதுடன், மணமூட்டும் பொருட்களாகவும், மருத்துவப் பயன்கள் கொண்டதாகவும் விளங்குகின்றன. இத்தகைய சிறப்பு மிக்க மிளகு, கொத்தமல்லி, மிளகாய், ஜாதிக்காய், கிராம்பு, பட்டை, பூண்டு, இஞ்சி, மஞ்சள் போன்ற சுவைதாளிதப் பயிர்களின் சாகுபடியும், இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 2,500 ஏக்கரில் சீமைக்கருவேல மரங்களை அகற்றி, மிளகாய் சாகுபடி செய்வதும் ஊக்குவிக்கப்படும். இதற்கென 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 17,500 ஏக்கரில்

சுவைதாளிதப்பயிர்கள் சாகுபடி செய்யும் 23 ஆயிரம் உழவர்கள் பயன்பெறுவார்கள்.

**அறிவிப்பு எண் : 34**

**பனை மேம்பாட்டு இயக்கம்**

நமது மாநில மரமான பனை மரம், தமிழர்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மைக்கு உதவும். முக்கியத்துவம் வாய்ந்த பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு நான்கு ஆண்டுகளாகப் பனை மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2025-2026 ஆம் ஆண்டில் பனை சாகுபடியை ஊக்குவிக்க 10 இலட்சம் பனை விதைகள், பனை மதிப்புக்கூட்டுப் பொருள் தயாரிக்கும் கூடங்கள், மதிப்புக்கூட்டுதல் பயிற்சி ஆகிய இனங்களுக்கு, பனை மேம்பாட்டு இயக்கத்தில் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் 20 ஆயிரம் நபர்கள் பயனடைவார்கள்.

3. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்றத்தில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள் சிலவற்றை மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2025-26-ஆம் நிதியாண்டில் செயல்படுத்திட ரூ.2818.1890 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அக்கருத்துருவினை ஏற்கலாம் எனக் கருதி, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று நடைபெற்ற வேளாண்மை நிதிநிலை அறிக்கையின்போது சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள், மேலே பத்தி-2ல் காணும் அறிவிப்புகளை 2025-2026-ஆம் நிதி ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இணைப்பு-I-ல் கண்டுள்ளவாறு திட்ட இனங்களைச் செயல்படுத்திட ரூ.27.633065 கோடிக்கு (ரூபாய் இருபத்து ஏழு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. இத்திட்டத்திற்கான செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையுடன் இணைப்பு II-ஆக சேர்க்கப்பட்டுள்ளன.

5. இத்திட்டங்களை செயல்படுத்த கீழ்க்கண்டவாறு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

i தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திடவும்;

ii மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.27,63,30,650/- (ரூபாய் இருபத்தேழு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரத்து

அறுநூற்று ஐம்பது மட்டும்) நிதியினை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெற்று வழங்கிட அனுமதியும், அதில் ரூ.95,10,650/- (ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) நிதியினை தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளருக்கு வழங்கவும்;

iii தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரிய செயற்பதிவாளர் மற்றும் இயக்குநர் தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை ஆகியோர் இத்திட்டத்திற்கு உரிய வழிகாட்டுதல்களைத் தவறாமல் பின்பற்றவும்;

iv இத்திட்டத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு விரைந்து சென்றடைய நிதி செலவினம் செய்வதற்கு ஏதுவாக IFHRMS-இல் காலாண்டு கட்டுப்பாட்டினைத் தளர்வு செய்திடவும்;

v திட்ட செயலாக்கத்தின் போது கள நிலவரத்தின் தேவைக்கேற்ப மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும் இனங்களின் நிதி இலக்கு மிகாமல் பொருள் இலக்கினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் அது தொடர்பான செயல் வழிகாட்டு நெறிமுறைகளை (Executive Guidelines) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு மாற்றி அமைத்துக்கொள்ளவும்;

6. மேலே பத்தி-4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | கணக்கு தலைப்பு | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் மூலம் | நிதி |
|---|---|---|---|---|
| 1 | "2401 – 00 - பயிர்வளர்ப்பு – 119 தோட்டக்கலையும் காய்கறி பயிர்வளர்ப்பும் – மாநில செலவினங்கள் – BJ – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம்". (த.தொ.கு 2401-00-119-BJ-311-01) | 2135.360 | 76.0852 | 2211.4452 |
| 2 | "2401 – 00 - பயிர்வளர்ப்பு – 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் – AM – மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் – 311 - மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம்". (த.தொ.கு 2401-00-789-AM-311-01) | 506.198 | 18.070235 | 524.2682 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | "2401 – 00 - பயிர் வளர்ப்பு – 796 - பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் – மாநில செலவினங்கள் – AG – மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் – 311 – மானியங்கள் – 01 – தனித்திட்டமானியம்".<br>(த.தொ.கு 2401-00-796-AG-311-01) | 26.642 | 0.951065 | 27.5931 |
| | மொத்தம் | 2668.200 | 95.1065 | 2763.3065 |
| ரூபாய் இருபத்தேழு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும் | | | | |

7. இவ்வாணை நிதித்துறையின் 09.05.2025-ம் நாளிட்ட அ.சா.எண்.10240563/நிதி(வே-உ.ந)/2025-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA). சென்னை-18.
செயற்பதிவாளர், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்,
குறளகம், சென்னை-104.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின்
தனிச் செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9.
நிதித் (வே-உ.ந.) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.1/வே.உ.5/அ.ந(மு.3/வ&தி), துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10240563/தோ.க.2/2025.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பொ.இரவி
அரசு சார்புச் செயலாளர்

## இணைப்பு-I

**அரசாணை (நிலை) எண்.128, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:19.05.2025**

| வ. எண் | திட்ட இனங்கள் | மானிய சதவீதம் | செயல் திட்டம் 2025-26 | |
|---|---|---|---|---|
| | | | பொருள் இலக்கு | நிதி இலக்கு (ரூபாய் இலட்சத்தில்) |
| I | தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (எக்டர்) | | | |
| 1 | பாரம்பரிய காய்கறிகள் பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 29)<br>Unit cost= Rs.60,000/- (மானியம் - 40%<br>ரூ.24000/- x 1,000 எக்டர் = ரூ.240.00 இலட்சம்) | 40% | 1000 | 240.000 |
| 2 | சுவைதாளித விதைப்பயிர்கள்–மிளகாய் பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 32)<br>Unit cost= Rs.30,000/-(மானியம் - 40%<br>ரூ.12,000/- x 250 எக்டர் = (ரூ. 30.00 இலட்சம்) | 40% | 250 | 30.000 |
| 3 | தென்னை பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 26)<br>Unit cost= Rs.24,000/- (மானியம் - 50%<br>ரூ.12,000/- x 4,000 எக்டர் = ரூ. 480.00 இலட்சம்) | 50% | 4000 | 480.00 |
| 4 | செடிமிளகு பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 32)<br>Unit cost= Rs.1,00,000/- (மானியம் - 40%<br>ரூ.40,000/- x 10 எக்டர் = ரூ. 4.00 இலட்சம்) | 40% | 10 | 4.000 |
| 5 | உதிரி மலர்கள் - மல்லிகை பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 31)<br>Unit cost= Rs.30,000/- (மானியம் - 40%<br>ரூ.12,000/- x 500 எக்டர் = ரூ. 60.00 இலட்சம்) | 40% | 500 | 60.000 |
| 6 | உதிரி மலர்கள் - ரோஜா பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 31)<br>Unit cost= Rs.30,000/- (மானியம் - 40%<br>ரூ.12,000/- x 810 எக்டர் = ரூ. 97.200 இலட்சம்) | 40% | 810 | 97.200 |
| 7 | உதிரி மலர்கள்-செண்டுமல்லி, சாமந்தி, கனகாம்பரம் போன்ற உதிரி மலர்கள் பரப்பு விரிவாக்கம் (அறிவிப்பு எண்- 31)<br>Unit cost= Rs.30,000/- (மானியம் -40%<br>ரூ.12,000/- x 300 எக்டர் = ரூ. 36.00 இலட்சம்) | 40% | 300 | 36.000 |
| | மொத்தம் | | 6870 | 947.200 |

| | | | | |
|---|---|---|---|---|
| II | வீட்டுத்தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல் | | | |
| 1 | மாடித்தோட்டத் தளைகள் விநியோகம் (எண்கள்) ஒரு தொகுப்பின் மொத்த விலை = ரூ.900/- (மானியம் - 50% ரூ.450/- x 20000 எண்கள் = ரூ.90.00இலட்சம்) | 50% | 20,000 | 90.00 |
| | மொத்தம் | | 20,000 | 90.00 |
| III | ஊடுபயிர் சாகுபடி ஊக்குவிப்பு | | | |
| 1 | தென்னையில் வாழை ஊடுபயிர் சாகுபடி (எக்டர்) (அறிவிப்பு எண்-26) Unit cost= Rs.20,000/- (மானியம் - 50% ரூ.10,000/- x 3,000 எக்டர்=ரூ.300.00 இலட்சம்) | 50% | 3000 | 300.000 |
| 2 | தென்னையில் ஜாதிக்காய் ஊடுபயிர் சாகுபடி (எக்டர்) (அறிவிப்பு எண்-26) Unit cost= Rs.20,000/- (மானியம் - 50% ரூ.10,000/-x 200 எக்டர்=ரூ. 20.00 இலட்சம்) | 50% | 200 | 20.000 |
| 3 | தென்னையில் செடிமிளகு ஊடுபயிர் சாகுபடி (எக்டர்) (அறிவிப்பு எண்-26) Unit cost=Rs.20,000/- (மானியம் - 50% ரூ.10,000/- x 25 எக்டர் = ரூ. 2.50 இலட்சம்) | 50% | 25 | 2.500 |
| | மொத்தம் | | 3225 | 322.500 |
| IV | தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள் | | | |
| 1 | தென்னை சுருள் வெள்ளை ஈ மேலாண்மை (எக்டர்) (அறிவிப்பு எண்-26) Unit cost= Rs.3,550/- (மானியம் - 50% ரூ.1,775/- x 68,000 எக்டர் = ரூ.1207.00இலட்சம்) | 50% | 68000 | 1207.000 |
| 2 | வேலிக்கருவேல மரங்களை அகற்றுதல் (எக்டர்) (அறிவிப்பு எண்-32) Unit cost= Rs.10,000/- (மானியம்-50% ரூ.5,000/- x 250 எக்டர் = ரூ. 12.50 இலட்சம்) | 50% | 250 | 12.500 |
| | மொத்தம் | | 68,250 | 1219.500 |
| V | முருங்கை ஏற்றுமதி மண்டலம் (அறிவிப்பு எண்- 4 ஈ) வேளாண் நிதிநிலை அறிவிப்பு 2023-24 (5 ஆண்டு தொடர் திட்டம்) | | | |
| 1. | உயிர்ம வேளாண்மை ஊக்குவித்தல் - மூன்றாம் ஆண்டு (எக்டர்) Unit cost= Rs.6,000/- (மானியம் - 50% ரூ.3,000/- x 250 எக்டர் = ரூ. 7.50 இலட்சம்) | 50% | 250 | 7.500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | சான்றிதழ் கட்டணம் வழங்குதல் மூன்றாம் ஆண்டு | 100% | 0 | 0.00 |
| 3. | உயிர்ம வேளாண்மை ஊக்குவித்தல்– இரண்டாம் ஆண்டு (எக்டர்)<br>Unit cost= Rs.6,000/-(மானியம் - 50%<br>ரூ.3,000/- x 250 எக்டர் = ரூ. 7.50 இலட்சம்) | 50% | 250 | 7.500 |
| 4. | சான்றிதழ் கட்டணம் வழங்குதல் - இரண்டாம் ஆண்டு | 100% | 0 | 0.00 |
| | மொத்தம் | | 500 | 15.000 |
| VI | திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல் | | | 4.000 |
| VII | பனை மேம்பாட்டு இயக்கம் | | | |
| அ) | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | | | |
| 1. | பனை விதைகள் விநியோகம் (எண்கள்)<br>(அறிவிப்பு எண்-34) (மானியம் - 100%<br>ரூ.3/- x 10,00,000 விதைகள் =<br>ரூ.30.00 இலட்சம்) | 100% | 10,00,000 | 30.00 |
| 2. | பனங்கன்றுகள் விநியோகம் (எண்கள்)<br>(மானியம் - 100%<br>ரூ.100/- x 10,000 எண்கள்=<br>ரூ.10.00 இலட்சம்) | 100% | 10,000 | 10.000 |
| 3. | பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் (அலகு)<br>(அறிவிப்பு எண்-34)(அலகின் விலை<br>ரூ.1,00,000/-) (மானியம் - 50%<br>ரூ.50,000/- x 60 எண்கள் =<br>ரூ.30.00 இலட்சம்) | 50% | 60 | 30.00 |
| | மொத்தம் | | 10,10,060 | 70.000 |
| ஆ) | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் (அறிவிப்பு எண்-34) | | | |
| 1. | பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை சார்ந்த மதிப்புக் கூட்டுப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி பெற்ற 250 பனை விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல்.<br>மொத்த செலவினம் - ரூ.19,130/அலகு<br>(மானியம் -50% ரூ.9,565/-x 250நபர்கள் =<br>ரூ.23.9125 இலட்சம்) | 50% | 250 | 23.9125 |
| 2. | 250 பனை விவசாயிகளுக்கு தரமான பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை சார்ந்த மதிப்புக் கூட்டுப் பொருட்கள் | 100% | | 19.500 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரிப்பு பயிற்சி ஒரு குழுவிற்கு ஆகும் மொத்த செலவினம் – ரூ.3,90,000/- (மானியம் - 100% ரூ.3,90,000/- x 5 குழுக்கள் (ஒரு குழுவிற்கு 50 நபர்கள் (5x50= 250)) = ரூ.19.500இலட்சம்) | | | |
| 3. | பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி பெற்ற 200 பெண்களுக்கு உபகரணங்கள் வழங்குதல். மொத்த செலவினம் – ரூ.7,257/அலகு (மானியம் - 100% ரூ.7,257 x 200 நபர்கள் = ரூ.14.514 இலட்சம்) | 100% | 200 | 14.514 |
| 4. | 200 பெண்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி அளித்தல். ஒரு குழுவிற்கு ஆகும் மொத்த செலவினம் – ரூ.4,64,750/- (மானியம் - 100% ரூ.4,64,750/- x 8 குழுக்கள் (ஒரு குழுவிற்கு 25 நபர்கள் (8x25=200)) = ரூ.37.18இலட்சம்) | 100% | | 37.180 |
| | | மொத்தம் | 450 | 95.1065 |
| | | ஆக மொத்தம் | | 2763.3065 |

**வதட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு-II

**அரசாணை (நிலை) எண்.128, வேளாண்மை – உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள்:19.05.2025**

### மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் 2025-26
### இனவாரியான வழிகாட்டு நெறிமுறைகள்

**அ. பொதுவான வழிகாட்டுதல்கள்**

1. பயனாளிகள் தோட்டக்கலை துறையின் இணையவழி மூலம் மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும். (https://www.tnhorticulture.tn.gov.in)
2. திட்ட இலக்குகளை மாவட்டத்திற்குத் தெரியப்படுத்திய உடன் அனைத்து வட்டாரங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
3. திட்ட இனங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட தோட்டக்கலை இணை / துணை இயக்குநர் முக்கிய பங்கு வகிப்பதுடன் சரியான வழிகாட்டுதல்களை வட்டாரங்களுக்கு வழங்கிட வேண்டும்.
4. வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரே திட்ட இனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் விவரங்களை சரிபார்த்து அங்கீகரிக்கும் அதிகாரம் உடையவராவார்.
5. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து திட்டப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.
6. பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினக் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
7. பயனாளிகள் / விவசாயிகளின் வகை, பாலினம் மற்றும் திட்டத்திற்கான தகுதி ஆகியவற்றை உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் கண்டறிந்து பயனாளி / விவசாயிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
8. திட்ட பலனைப் பெற, தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு சொந்த நிலம்/குத்தகை நிலம் (10 வருட பதிவு செய்யப்பட்ட குத்தகை) இருக்க வேண்டும்.
9. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்களான பணப்பரிவர்த்தனை, மின்னணு தீர்வை (ECS) மூலமாகவோ அல்லது DBT மூலமாகவோ வழங்குவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி / கூட்டுறவு வங்கி ஆகிய ஏதேனும் ஒன்றில் அவர் கணக்கு வைத்திருக்க வேண்டும்.
10. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி, இந்திய அரசின் UIDAI (இந்திய தனிப்பட்ட அடையாள ஆணைய அமைப்பு) திட்டத்தில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும். மேலும், அவரது வங்கிக் கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
11. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி திட்டத்தில் பயன்பெற திட்ட இனங்களுக்கு ஏற்றவாறு ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பட்டா/சிட்டா, அடங்கல், நில வரைபடம், வங்கிக் கணக்கு புத்தகம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.
12. திட்டம் சார்ந்த செயலாக்கத்திற்கு முன், முந்தைய ஆண்டுகளில் பயனடைந்த விவசாயியை மீண்டும் தேர்வு செய்வது தவிர்த்து, பயன்பெறாத விவசாயிகளுக்கு முன்னுரிமையில் வழங்க சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும்.

13. விவசாயிகள் அனைத்து திட்ட வழிகாட்டுதல்களையும் பின்பற்றியுள்ளனர் என்பதனை வட்டார அலுவலர்கள் உறுதி செய்த பிறகே DBT முறையில் பயனாளிக்கு மானியம் விடுவிக்கப்பட வேண்டும். (பிற வகையிலான பரிவர்த்தனையைத் தவிர்க்க வேண்டும்)
14. நடவுச் செடிகள் அனைத்தும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு பெறப்பட வேண்டும். அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி குறைவாகவோ அல்லது இருப்பு இல்லை என்றாலோ, பிற அரசுப் பண்ணைகள் / வேளாண் பல்கலைக்கழகங்கள் / வேளாண் அறிவியல் நிலையங்களிலிருந்து பெறப்பட வேண்டும்.
15. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பழக்கன்றுகள் / நடவுச் செடிகள் தரமானதாகவும், பூச்சி நோய்த் தாக்குதல் அற்றதாகவும், குறைந்தபட்சம் ஒரு ஆண்டு வயதுடைய கன்றுகளாகவும் இருக்க வேண்டும். விவசாயிகள் வயலில் நடவு செய்த பின் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு அவற்றின் வளர்ச்சியைக் கண்காணிக்க வேண்டும்.
16. அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படாத கன்றுகள் அரசு விதிமுறைகளின்படி கொள்முதல் செய்து வழங்கியோ அல்லது பின்னேற்பு மானியமாகவோ வழங்கி திட்டத்தினை செயல்படுத்த வேண்டும்.
17. விவசாயிகளுக்கு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நடவுப் பொருட்கள் அனைத்தும் இணையவழி (Online Billing) மூலம் அன்றைய தினமே பட்டியலிடப்பட வேண்டும்.
18. உயிரி இடுபொருட்கள் / இயற்கை உரங்கள் / இரசாயன உரங்கள் போன்றவை அரசிடமிருந்தோ/தனியார் நிறுவனத்திலிருந்தோ கொள்முதல் செய்யும் பட்சத்தில் உரிய ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி கொள்முதல் செய்ய வேண்டும்.
19. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற விதைகள் / உயிரி இடுபொருட்கள் / இயற்கை உரங்கள் / இரசாயன உரங்கள் போன்றவற்றின் தரத்தினை உறுதி செய்த பின்னரே விநியோகம் செய்வதை மாவட்ட அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.
20. உதவி தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆகியோர் தங்கள் பகுதியில் திட்டங்கள் அனைத்தும் சரியாக செயல்படுவதை உறுதி செய்ய, பல்வேறு நிலைகளில் கள ஆய்வினை முறையாக மேற்கொள்ள வேண்டும்.
21. திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன், செயல்படுத்தும் போது மற்றும் செயல்படுத்திய பின் என பல்வேறு நிலைகளில் அனைத்து இனங்களுக்கும் ஒரே கோணத்தில் இருந்து புவியிடக் குறியீடுடன் கூடிய (Geotagged) கள புகைப்படங்கள் வட்டார அலுவலர்களால் எடுக்கப்பட வேண்டும்.
22. வட்டார அலுவலர்கள் விவசாயி சமர்ப்பித்த திட்ட இனங்களின் பட்டியல்களைச் சரிபார்த்து, ஆய்வு மேற்கொண்டு அனைத்தும் சரியாக இருப்பதை உறுதி செய்த பின்பே பக்க பதிவுடன் சான்றளிக்க வேண்டும்.
23. ஒவ்வொரு இனத்திற்கும் தொடர் நடவடிக்கைப் பதிவேடு பராமரிக்கப்பட்டு, அனைத்து விவரங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

24.மொத்த நிதியில் பொது பிரிவு விவசாயிகளுக்கு / பயனாளிகளுக்கு 80 சதவீதமும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு / பயனாளிகளுக்கு 19 சதவீதமும், பழங்குடியின விவசாயிகளுக்கு / பயனாளிகளுக்கு 1 சதவீதமும் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 30 சதவீதம் என திட்ட இனங்கள் வழங்கப்பட வேண்டும். (மாடித்தோட்டம், பனை மேம்பாட்டு இயக்கம் தவிர)

25.ஒவ்வொரு இனத்திலும் (மாடித்தோட்டம், பனை மேம்பாட்டு இயக்கம் தவிர) 70 சதவீத நிதி சிறு, குறு விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

**ஆ. திட்ட வழிகாட்டுதல்கள்:**

திட்ட வாரியான வழிகாட்டுதல்கள் பின்வருமாறு.

**1. தோட்டக்கலைப்பயிர்களின் பரப்பு விரிவாக்கம் – ரூ. 947.200 இலட்சம்**

**i). பாரம்பரிய காய்கறி இரகங்களின் பரப்பு விரிவாக்கம்-ரூ.240.00 இலட்சம் - 1,000 எக்டர்**

**பயிர்கள்:** மணப்பாறை கத்தரி, சில்லுக்கொடி கத்தரி, குலசை கத்தரி, பெரிய கொல்லம்பட்டி கத்தரி, தருவைத் தக்காளி, மஞ்சை குடம் தக்காளி, ஆனைக்கொம்பன் வெண்டை, சிவப்பு வெண்டை, சிறகு அவரை, கோழி அவரை, மூக்குத்தி அவரை போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய காய்கறி வகைகள்.

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள். (சென்னை தவிர)
- மொத்த செலவு - ரூ.60,000/ எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.24,000/எக்டர்.
- குழித்தட்டு நாற்றுகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்தும், விதைகள் மாவட்ட அலுவலர்களால் கொள்முதல் செய்தும் வழங்கப்படும்.
- நடவுப்பொருட்கள் செலவினம் போக மீதமுள்ள தொகை ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மைக்கான இடுபொருட்களுக்கு வழங்கப்படும்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**விரிவான விவரங்கள்:**

கத்தரி: மணப்பாறை கத்தரி, சில்லுக்கொடி கத்தரி, குலசை கத்தரி, பெரிய கொல்லம்பட்டி கத்தரி, முள்ளு கத்தரி, கண்ணாடி கத்தரி, ஆண்டார்குளம் கத்தரி, வரி கத்தரி, வாசுதேவநல்லூர் கத்தரி போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய கத்தரி வகைகள்

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குழித்தட்டு நாற்றுகள் 25,000 நாற்றுகள்/ எக்டர். | எண்கள் | 25,000 | 1.2 | 24,000 (20,000 நாற்றுகள்) | 6,000 (5,000 நாற்றுகள்) | 30,000 |

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை | - | - | - | - | 12,000 | 12,000 |
| 3 | உழவு செய்து நிலம் தயாரித்தல், நடவு செய்தல் மற்றும் நீர் பாய்ச்சுதல் | | | | | 10,000 | 10,000 |
| 4 | களையெடுத்தல் | | | | | 8,000 | 8,000 |
| | மொத்தம் | | | | 24,000 | 36,000 | 60,000 |

தக்காளி: மஞ்சள் குடம் தக்காளி, தருவைத் தக்காளி, குழி தக்காளி, கொடி தக்காளி, அன்னஞ்சி தக்காளி போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய தக்காளி வகைகள்

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குழித்தட்டு நாற்றுகள் 25000 நாற்றுகள்/ எக்டர். | எண்கள் | 25,000 | 1.2 | 24,000 (20,000 நாற்றுகள்) | 6,000 (5,000 நாற்றுகள்) | 30,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை | - | - | - | - | 12,000 | 12,000 |
| 3 | உழவு செய்து நிலம் தயாரித்தல், நடவு செய்தல் மற்றும் நீர் பாய்ச்சுதல் | | | | | 10,000 | 10,000 |
| 4 | களையெடுத்தல் | | | | | 8,000 | 8,000 |
| | மொத்தம் | | | | 24,000 | 36,000 | 60,000 |

வெண்டை: நாட்டு வெண்டை, ஆனைக்கொம்பன் வெண்டை, சிவப்பு வெண்டை போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய வெண்டை வகைகள்

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்டை விதைகள் | கிலோ | 12 | 2,250 | 24,000 | 3,000 | 27,000 |

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை | | | | | 13,000 | 13,000 |
| 3 | உழவு, நிலம் தயாரித்தல், நடவு செய்தல் மற்றும் நீர் பாய்ச்சுதல் | | | | | 10,000 | 10,000 |
| 4 | களையெடுத்தல் | | | | | 10,000 | 10,000 |
| | மொத்தம் | | | | 24,000 | 36,000 | 60,000 |

அவரை: கோழி அவரை, சிறகு அவரை, மூக்குத்தி அவரை, கொடி தம்பட்டை அவரை போன்ற பல்வேறு வகையான பாரம்பரிய அவரை வகைகள்.

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நடவுப்பொருள் (அவரை விதை) | கிலோ | 5 | 4,500 | 22,500 | - | 22,500 |
| 2 | ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை | | | | 1,500 | 8,500 | 10,000 |
| 3 | உழவு, நிலம் தயாரித்தல், வரப்பு அமைத்தல், நடவு செய்தல் மற்றும் நீர் பாய்ச்சுதல் | | | | | 12,000 | 12,000 |
| 4 | படர் கொம்பு ஊன்றுதல் | | | | | 5,000 | 5,000 |
| 5 | நீர் பாய்ச்சுதல் | | | | | 5,500 | 5,500 |
| 6 | களையெடுத்தல் | | | | | 5,000 | 5,000 |
| | மொத்தம் | | | | 24,000 | 36,000 | 60,000 |

ii) **மிளகாய் பரப்பு விரிவாக்கம்-ரூ. 30.00 இலட்சம் - 250 எக்டர்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி தவிர).
- மொத்த செலவினம் - ரூ.30,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.12,000/எக்டர்.
- தேவையான குழித்தட்டு நாற்றுகள் அரசு தோட்டக்கலை பண்ணையில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**மிளகாய் பரப்பு விரிவாக்கம் - மானிய விவரம்:**

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குழித்தட்டு நாற்றுகள் | எண்கள் | 25,000 | 1.2 | 12,000 (10,000 நாற்றுகள்) | 18,000 (15,000 நாற்றுகள்) | 30,000 |
| | மொத்தம் | | | | 12,000 | 18,000 | 30,000 |

**iii) தென்னை பரப்பு விரிவாக்கம் - ரூ. 480.00 இலட்சம் - 4,000 எக்டர்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தென்னை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
- ஒரு எக்டருக்கு ரூபாய் 12000/- வீதம் தென்னங்கன்றுகள், ஊடுபயிராக தட்டைபயறு விதைகள் போன்றவற்றிற்கு மானியம் வழங்கப்படும்.
- மொத்த செலவு - ரூ.24000/- எக்டர், 50 சதவீத மானியம் - ரூ.12,000/எக்டர்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.
- தேவையான தென்னங்கன்றுகள் தென்னை நாற்றுப்பண்ணைகள்/ அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.
- விவசாயப் பெருமக்களின் விருப்பத்தின் படி, நெட்டை, நெட்டை x குட்டை மற்றும் குட்டை x நெட்டை ஒட்டு இரகக் கன்றுகள் வழங்கப்படும்.
- ஊடுபயிர் சாகுபடி செய்யத் தேவையான தட்டைப் பயறு விதைகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.
- சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**தென்னை பரப்பு விரிவாக்கம்: மானிய விபரம் (நெட்டை இரகம்)**

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென்னங்கன்றுகள் | எண்கள் | 175 | 65/- (நெட்டை இரகம்) | 11,375 | - | 11,375 |
| 2 | ஊடுபயிராக தட்டைப்பயறு விதைகள் | கிலோ | 20 | 170 | 625 | 2,775 | 3,400 |
| 3 | உழவு செய்தல் | | | | | 2,500 | 2,500 |
| 4 | குழி எடுத்தல் (3x3x3 அடி 175 குழிகள் எடுத்தல்) | | | | | 6,725 | 6,725 |
| | மொத்தம் | | | | 12,000 | 12,000 | 24,000 |

**தென்னை பரப்பு விரிவாக்கம்: மானிய விபரம் (நெட்டைX குட்டை)**

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென்னங்கன்றுகள் | எண்கள் | 138 | 125 | 12,000 (96 எண்கள்) | 5,250 (42 எண்கள்) | 17,250 |
| 2 | ஊடுபயிராக தட்டைப்பயறு விதைகள் | கிலோ | 20 | 170 | | 3,400 | 3,400 |
| 3 | குழி எடுத்தல் (3x3x3 அடி 138 குழிகள் எடுத்தல்) | | | | | 3,350 | 3,350 |
| | மொத்தம் | | | | 12,000 | 12,000 | 24,000 |

**தென்னை பரப்பு விரிவாக்கம்: மானிய விபரம் (குட்டை X நெட்டை)**

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தென்னங்கன்றுகள் | எண்கள் | 138 | 300 | 12,000 (40 எண்கள்) | 29,400 (98 எண்கள்) | 41,400 |
| | மொத்தம் | | | | 12,000 | 29,400 | 41,400 |

**iv). செடிமிளகு பரப்பு விரிவாக்கம் - ரூ. 4.000 இலட்சம் - 10 எக்டர்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தருமபுரி, தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், சேலம், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், திருவண்ணாமலை.
- மொத்த செலவினம் - ரூ. 1,00,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.40,000/எக்டர்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**செடிமிளகு பரப்பு விரிவாக்கம்- மானிய விவரம்**

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செடிமிளகு செடிகள் (Bush Pepper) | எண்கள் | 2000 | 50 | 40,000 (800 செடிகள்) | 60,000 (1200 செடிகள்) | 1,00,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை | | | | - | - | - |

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | நிலத்தினை தயார்படுத்துதல், நடவு செய்தல், நீர்பாசனம் மற்றும் பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | | | | - | - | - |
| | மொத்தம் | | | | 40,000 | 60,000 | 1,00,000 |

**v) மலர் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (உதிரி மலர்கள்) - ரூ. 193.200 இலட்சம்**

**1). மல்லிகை பரப்பு விரிவாக்கம் - ரூ. 60.000 இலட்சம் - 500 எக்டர்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர).
- மொத்த செலவினம் - ரூ.30,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.12,000/எக்டர்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**மல்லிகை:**

இடைவெளி: 1.25x 1.25m

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மல்லிகை செடிகள் | எண்கள் | 2,000 | 15 | 12,000 (800 செடிகள்) | 18,000 (1,200 செடிகள்) | 30,000 |
| | மொத்தம் | | | | 12,000 | 18,000 | 30,000 |

**2. ரோஜா பரப்பு விரிவாக்கம் - ரூ. 97.200 இலட்சம் - 810 எக்டர்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர).
- மொத்த செலவினம் - ரூ.30,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.12,000/எக்டர்.
- ஒரு விவசாயி அதிபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**ரோஜா**

இடைவெளி: 2m x 1m

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ரோஜா செடிகள் | எண்கள் | 1,200 | 25 | 12,000 (480 செடிகள்) | 18,000 (720 செடிகள்) | 30,000 |
| | மொத்தம் | | | | 12,000 | 18,000 | 30,000 |

**3. செண்டுமல்லி, சாமந்தி, கனகாம்பரம் போன்ற உதிரி மலர்கள் பரப்பு விரிவாக்கம் - ரூ.36.00 இலட்சம் - 300 எக்டர்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர).
- மொத்த செலவினம் - ரூ.30,000/எக்டர், 40 சதவீத மானியம் - ரூ.12,000/எக்டர்.
- ஒரு விவசாயி அதிகபட்சமாக 2 எக்டர் வரை பயன்பெறலாம்.

**செண்டுமல்லி**

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத்தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செண்டுமல்லி நாற்றுகள் | எண்கள் | 6,000 | 5 | 12,000 (2,400 நாற்றுகள்) | 18,000 (3,600 நாற்றுகள்) | 30,000 |
| | மொத்தம் | | | | 12,000 | 18,000 | 30,000 |

**சாமந்தி - இடைவெளி: (30cmx45 cm)**

| வ. எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத்தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சாமந்தி செடிகள் | எண்கள் | 15000 | 2 | 12,000 (6,000 செடிகள்) | 18,000 (9,000 செடிகள்) | 30,000 |
| | மொத்தம் | | | | 12,000 | 18,000 | 30,000 |

**கனகாம்பரம் -** இடைவெளி: 60 cmx 40 cm

| எண் | விவரம் | அலகு | அளவு | ஒரு செடியின் விலை(ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத்தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கனகாம்பரச் செடிகள் | எண்கள் | 2,000 | 15 | 12,000 (800 செடிகள்) | 18,000 (1,200 செடிகள்) | 30,000 |
| | மொத்தம் | | | | 12,000 | 18,000 | 30,000 |

**II.வீட்டுத்தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல் - ரூ.90.00இலட்சம்**

**i) மாடித்தோட்டத் தளைகள் விநியோகம் - ரூ. 90.00 இலட்சம் – 20,000 தளைகள்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள்
- திட்ட ஆவணங்கள்: ஏதேனும் ஒன்று (அடையாள அட்டை/ முகவரி ஆதாரம்/ ஆதார் அட்டை) மற்றும் பயனாளியின் புகைப்படம் (18 வயதிற்கு மேல்)
- ஒவ்வொரு தொகுப்பிலும் பின்வரும் இடுபொருட்கள் இருக்க வேண்டும்.

| வ. எண் | இடுபொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1 | செடி வளர்ப்புப் பைகள் | 6 எண்கள் |
| 2 | 2 கிலோ தென்னை நார்க்கழிவுக் கட்டிகள் | 6 எண்கள் |

| வ.எண் | இடுபொருட்கள் | அளவு |
|---|---|---|
| 3 | 6 வகையான காய்கறி விதைகள் (அதிக மகசூல் தரும் வீரிய இரகம் மற்றும் பாரம்பரிய வகைகள்) (அரசு நிறுவனம் மூலம்) | 6 விதைப் பொட்டலங்கள் (ரூ.10/பொட்டலம்) |
| 4 | அசோஸ்பைரில்லம் (அரசு நிறுவனம் மூலம்) | 300 கிராம் |
| 5 | பாஸ்போபாக்டீரியா (அரசு நிறுவனம் மூலம்) | 300 கிராம் |
| 6 | டிரைகோடெர்மா விரிடி (அரசு நிறுவனம் மூலம்) | 200 கிராம் |
| 7 | வேப்பெண்ணெய் மருந்து | 100 மில்லி |
| 8 | மாடித் தோட்ட காய்கறி வளர்ப்பு முறைக்கான கையேடு | 1 எண் |

- ஒரு தொகுப்பின் மொத்த விலை - ரூ.900/- (போக்குவரத்து செலவு உட்பட)
- 50 சதவீத மானியம் - ரூ.450/- பயனாளியின் பங்குத்தொகை - ரூ.450/-
- ஒரு பயனாளி அதிகபட்சமாக இரண்டு தொகுப்புகள் வரை பெறமுடியும்.

**III. தோட்டக்கலைப் பயிர்களில் ஊடுபயிர் சாகுபடி - ரூ. 322.500 இலட்சம்**

**i). தென்னையில் வாழை ஊடுபயிர் சாகுபடி - ரூ. 300.00 இலட்சம் – 3,000 எக்டர்**

- தென்னங்கன்றுகள் நடவு செய்து ஐந்து வருடங்கள் வரை ஆன தோப்புகளில் வாழை சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும்.
- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி தவிர).
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்.
- மானியம் ரூ. 10,000/எக்டர் (50%)

**தென்னையில் வாழை ஊடுபயிர் சாகுபடி - மானிய விவரம்:**

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வாழைக்கன்றுகள் | எண்கள் | 1,000 | 10 | 10,000 | - | 10,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை | | | | - | 4,420 | 4,420 |
| 3 | நிலத்தினை தயார்படுத்துதல், நடவு செய்தல், நீர்பாசனம் மற்றும் பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | | | | | 5,580 | 5,580 |
| | மொத்தம் | | | | 10,000 | 10,000 | 20,000 |

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை பரிந்துரைப்படி ஊடுபயிர் செடிகளின் எண்ணிக்கை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**ii) தென்னையில் ஜாதிக்காய் ஊடுபயிர் சாகுபடி - ரூ. 20.00 இலட்சம் - 200 எக்டர்**

- வளர்ந்து விட்ட தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக குறைவாகக் கிடைக்கும் வெளிச்சத்தைப் பயன்படுத்தி வளரக்கூடிய ஜாதிக்காய்

பயிரிடும் விவசாயிகளை ஊக்கப்படுத்திட நடவுச் செடிகள் மானியத்தில் வழங்கப்படும்.

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி மானியம் ரூ. 10,000/எக்டர் (50% மானியம்)
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்.

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜாதிக்காய் செடிகள் | எண்கள் | 120 | 100 | 10,000 | 2,000 | 12,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை | | | | - | 4,000 | 4,000 |
| 3 | நிலத்தினை தயார்படுத்துதல், நடவு செய்தல், நீர்பாசனம் மற்றும் பயிர் சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | | | | | 4,000 | 4,000 |
| | மொத்தம் | | | | 10,000 | 10,000 | 20,000 |

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை பரிந்துரைப்படி ஊடுபயிர் செடிகளின் எண்ணிக்கை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**iii) தென்னையில் மிளகு ஊடுபயிர் சாகுபடி- ரூ. 2.50இலட்சம் - 25 எக்டர்**

- தென்னந்தோப்புகளில் மிளகு ஊடுபயிர் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும்.
- தருமபுரி, தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், சேலம், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.
- மானியம் ரூ. 10,000/எக்டர் (50% மானியம்)
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்.

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மிளகுச் செடிகள் (Bush Pepper) | எண்கள் | 175 | 50 | 8,750 | - | 8,750 |
| 2 | ஒருங்கிணைந்த உர, நோய் மற்றும் பூச்சி மேலாண்மை | | | | 1,250 | 2,750 | 4,000 |
| 3 | நிலத்தினை தயார்படுத்துதல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் | | | | | 7,250 | 7,250 |

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| | மற்றும் பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | | | | | | |
| | | மொத்தம் | | | 10,000 | 10,000 | 20,000 |

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை பரிந்துரைப்படி ஊடுபயிர் செடிகளின் எண்ணிக்கை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**IV. தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள் - ரூ. 1219.50 இலட்சம்.**

**i) தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துதல் - ரூ. 1207.00 இலட்சம் - 68,000 எக்டர்**

தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திடவும் சாகுபடியில் இருக்கும் தென்னை மரங்களை வலுப்படுத்திடவும் தென்னை விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வழங்குவதே சிறந்தது.

எனவே, ஒருங்கிணைந்த முறையில் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்திட ஏதுவாக மஞ்சள் ஒட்டும் பொறி, ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகள் ஆகிய இனங்களில் மாநில நிதியிலிருந்து 50 சதவீத மானியம் ரூ.12.07 கோடி நிதியில் வழங்கப்படும்.

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி தவிர)
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்.
- மானியம் ரூ. 1775/எக்டர் (50%)

**தென்னையில் சுருள் வெள்ளை ஈ தடுப்பு திட்டம் ஒரு எக்டர் பரப்பிற்கான மானிய விபரம்**

| வ. எண் | இனம் | அலகு | அளவு | ஒரு அலகின் விலை (ரூ) | மானிய விலை (ரூ) | விவசாயியின் பங்குத் தொகை (ரூ) | மொத்த விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **மஞ்சள் ஒட்டும் பொறி நிறுவுதல்** 5 அடி நீளம் x 1.5 அடி அகலம் | எண்கள் | 20 | 150 | 1,475 | 1,525 | 3,000 |
| 2 | ஆமணக்கு எண்ணெய்/ஒட்டு திரவம் | லிட்டர் | 1 | 250 | - | 250 | 250 |
| 3 | ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் | எண்கள் (அட்டை) | 1,000 | 300 | 300 | - | 300 |
| | மொத்தம் | | | | 1,775 | 1,775 | 3,550 |

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையில்
**செலவினம்:** 68,000 எக்டருக்கு ரூ.12.07 கோடி.

**ii) வேலிக் கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி- ரூ.12.50 இலட்சம் – 250 எக்டர்**

- மிளகாய் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உற்பத்தி மற்றும் தரத்தினை உயர்த்திட, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களை ஒருங்கிணைத்து மிளகாய் மண்டலமாக ஐந்தாண்டுகளில் மாற்றப்படும் என 2023-24 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு இதுவரை இத்திட்டத்தின் கீழ் 650 எக்டர் பரப்பளவில் விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கருவேல மரங்கள் அகற்றப்பட்டு மிளகாய் சாகுபடி செய்யப்பட்டது.
- இவ்வாண்டும் விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வேலிக் கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடியினை ஊக்குவிக்க ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டர் வீதம், கருவேல மரங்களை அகற்ற எக்டர் ஒன்றுக்கு 50 சதவீத மானியமாக ரூ.5000 வீதம் 250 எக்டருக்கு மானியம் வழங்கப்படும்.

**V) முருங்கை ஏற்றுமதி மண்டலம் - ரூ. 32.50 இலட்சம் – 500 எக்டர்**

- உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்க உதவித்தொகை – எக்டர் ஒன்றுக்கு ரூ.3000/- (3- வது வருடம்)
- உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்க உதவித்தொகை – எக்டர் ஒன்றுக்கு ரூ.3000/- (2- வது வருடம்)
- முருங்கை ஏற்றுமதி மண்டலத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கான உயிர்ம வேளாண்மை சான்றிதழ் வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.

**VI). திட்ட செயலாக்கம் மற்றும் ஆவணப்படுத்துதல் - ரூ. 4.00 இலட்சம்**

- திட்ட அடிப்படையிலான கட்டமைப்பிற்கு மாவட்ட அலுவலர்களால் கையேடு பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் பணியின் பல்வேறு நிலைகள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- அனைத்து நிலைகளிலும் விவசாயிகளின் மகசூல் மற்றும் வருமானத்தைப் பதிவு செய்து ஒவ்வொரு வட்டார அளவிலும் திட்ட இன வாரியாக சாதனைகள் பராமரிக்கப்பட்டு, அதன் விவரங்கள் இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- பயனாளிகள் வாரியாக பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். மகசூல், ஈட்டப்பட்ட வருமானம் போன்றவை மற்றும் பிற அளவுருக்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- விவசாயிகள் வயலின் முன் விளம்பரப்பலகை வைக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் சின்னத்துடன் கூடிய விளம்பரப்பலகை கீழே குறிப்பிட்டுள்ளவாறு அமைக்க வேண்டும்.

## உயர் மதிப்பிலான இனங்களுக்கு வைக்கவேண்டிய நிரந்தர விளம்பர பலகை (4' * 3' அடி)

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)- 2025-26

| | |
|---|---|
| விவசாயி பெயர்: | திட்ட இனம்: |
| த/பெ / க/பெ: | பரப்பு: |
| கிராமம்/சர்வே எண்: | மதிப்பு: ரூ. |
| வட்டாரம்/மாவட்டம்: | அரசு உதவித்தொகை: ரூ. |

## பனை மேம்பாட்டு இயக்கம் – 2025-26

பனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் இதர கைவினைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவதாலும், பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும், 2021-22 ஆம் ஆண்டு முதல், மாநில அரசால் "பனை மேம்பாட்டு இயக்கம்" அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பனை மரத்தின் முக்கியத்துவம்:**

- பனை மரங்கள் புயல் மற்றும் காற்றினால் அதிகளவில் பாதிப்படையாமல் நிலைத்து நிற்கும் தன்மை உடையவை.
- பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மைக்கு உதவுகின்றன.
- பனை மரத்தின் தண்டு நார்ச்சத்து நிறைந்து, நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுள்ளமையால், வளைந்தாலும் உடையாத் தன்மையைக் கொண்டது. மேலும், இதன் இலைகள் வேலிகள் மற்றும் கூரைகள் அமைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.
- மண்ணை நிலைப்படுத்துவதன் மூலம் மண் அரிப்பைத் தடுக்கிறது. மற்றும் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கிறது.

**நோக்கங்கள்:**

- மழை நீரைச் சேமித்து வைத்தல்.
- நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துதல்
- கடும் வெள்ளம் மற்றும் மழையின் போது, ஏரி மற்றும் கண்மாய்களின் கரைகளைப் பாதுகாத்தல்.
- மக்களிடையே மதிப்புக் கூட்டப்பட்ட பனை உணவு பொருட்களான பனை வெல்லம், பனங்கற்கண்டு போன்றவை தரமானதாகக் கிடைக்க உதவுதல்.
- உள்ளூர் கிராமத் தொழிலாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
- பல்வேறு பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி மூலம், அந்நிய செலாவணி வருவாயை அதிகரித்தல்.

**பனை மேம்பாட்டு இயக்கம் – இனம் வாரியான வழிகாட்டு நெறிமுறைகள்**

**அ) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை – திட்ட இனங்கள்**

**1. பனை விதை விநியோகம் - ரூ. 30.00 லட்சம் – 10 இலட்சம் விதைகள்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்** – அனைத்து மாவட்டங்களும் (நீலகிரி மற்றும் சென்னை தவிர).
- பனை விதைகள் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, இலக்கு ஒதுக்கீட்டின்படி, விவசாயிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.
- பனை விதை ஒன்றின் விலை - ரூ. 3/-, (100 சதவீத மானியம்)
- பயனாளிக்கு (தனிநபர்) அதிகபட்சமாக 50 விதைகளும், பொது இடங்களில் தொண்டு நிறுவனங்கள்/ ஊராட்சி மன்றங்கள் மூலம் நடுவதற்கு அதிகபட்சமாக 100 விதைகளும் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

**2. பனங்கன்றுகள் விநியோகம் - ரூ. 10.00 லட்சம் – 10,000 எண்கள்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்** – அனைத்து மாவட்டங்களும் (நீலகிரி மற்றும் சென்னை தவிர).
- பனங்கன்றுகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்படும்.

- பனங்கன்று ஒன்றின் விலை - ரூ. 100/-, (100 சதவீத மானியம்)
- பயனாளிக்கு (தனிநபர்) அதிகபட்சமாக 15 பனங்கன்றுகளும், பொது இடங்களில் தொண்டு நிறுவனங்கள், ஊராட்சி மன்றங்கள் மூலம் நடுவதற்கு அதிகபட்சமாக 30 பனங்கன்றுகளும் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

3. **பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் – ரூ. 30.00 இலட்சம் – 60 எண்கள்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டம்** – அனைத்து மாவட்டங்களும் (நீலகிரி மற்றும் சென்னை தவிர).
- **பனை சார்ந்த சிறு தொழில் முனைவோர்களுக்கு** 160 சதுர அடியில் நிரந்தர கட்டமைப்பு அமைக்க 50 சதவீதம் பின்னேற்பு மானியமாக ஒரு அலகிற்கு ரூ. 50,000/- வீதம் வழங்கப்படும் (மொத்த செலவு - ரூ.1,00,000/அலகு).
- பயனாளி சொந்த நிலத்தில்/குத்தகை நிலத்தில் பனை சாகுபடி அல்லது பனை சார்ந்த தொழில் செய்பவராக இருக்க வேண்டும்.
- பயனாளி தொடக்க பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் (Primary Jaggery Producers Co-operative Society) உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| வ. எண் | விவரம் | தொகை (ரூ.) (தோராயமாக) |
|---|---|---|
| 1 | **அடித்தளம், தரை வேலை மற்றும் சுவர் அமைத்தல்**<br>அ) சிமெண்ட் கான்கிரீட் 1:4:8 (ஒரு பங்கு சிமெண்ட் நான்கு பங்கு எம் மணல் மற்றும் எட்டு பங்கு இயந்திரத்தால் உடைத்து நொறுக்கப்பட்ட கல் ஜெல்லி) 40 மிமீ அளவுள்ள HBG மெஷின் நொறுக்கப்பட்ட கல் ஜெல்லியை நிறுவுதல் மற்றும் அடித்தளத்தை நிறுவுதல் மற்றும் தேவையானால் நீர் வடித்தல் உட்பட<br>ஆ) சுற்றுச்சுவர் ( உயரம் - 1.5 அடி, அகலம் – 0.5 அடி)<br>இ) அடுப்பு ( உள் அளவு – 2 அடி<br>வெளி அளவு – 3 அடி) | 27,500 |
| 2 | **கூரை அமைத்தல்** - Cooling sheet/ Asbestos sheet with proper supporting structure | 71,500 |
| 3 | எதிர்பாராச் செலவு | 1,000 |
| | **மொத்தம்** | **1,00,000** |

**ஆ) தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் – திட்ட இனங்கள்**

**1. பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி பெறும் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் – ரூ. 23.9125 இலட்சம் – 250 நபர்கள்**

- இத்திட்டம் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

- இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் உள்ள 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பனை விவசாயிகளின் ஆதார் எண் பெற்று அப்பயனாளிகள் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய அலுவலர்களால் இணைந்து தேர்வு செய்யப்படுவர்.
- இத்திட்டப் பயனாளிகளால் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை சார்ந்த மதிப்புக் கூட்டுப் பொருட்கள் மாநில / மாவட்ட சம்மேளனங்களின் கிளைகள் மூலம் சந்தைப்படுத்தப்படும்.
- மொத்த செலவினம் - ரூ.19,130/அலகு
- ஒரு பயனாளிக்கு 50% மானியத்தில் உபகரணங்கள் வழங்கப்படும்.

**வழங்கப்படும் உபகரணங்களின் விவரம் பின்வருமாறு:**

| வ. எண். | கருவிகள் மற்றும் உபகரணங்கள் | எண்ணிக்கை | மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | பதநீர் ஊற்றி வைக்கும் பாத்திரம் - 50 லிட்டர் கொள்ளளவு (Thickness - 2 mm. Dimension - Inner Dia - 19" x Height - 10.5") | 1 | 2,300 |
| 2. | பதநீர் காய்ச்சும் கொப்பரை - 150 லி. கொள்ளளவு (Diameter 560 mm, Height 620mm, Weight 8.9 kg.) | 1 | 13,500 |
| 3. | மர துடுப்பு T-Type (Country wood) | 1 | 230 |
| 4. | ஸ்டீல் கண் கரண்டி - (2 ½ அடி) | 1 | 450 |
| 5 | 16 குழிகள் கொண்ட அச்சு மரப்பலகை (ஒரு குழி 100 கிராம்) (Country wood)<br>16 குழிகள் கொண்ட அச்சு மரப்பலகை (ஒரு குழி 200 கிராம்) (Country wood) | 1 | 2,300 |
| 6. | ஸ்டீல் குழி கரண்டி - (1 ½ அடி) | 1 | 350 |
| | **மொத்தம்** | | 19,130 |

**2.பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி வழங்குதல் – ரூ. 19.500 இலட்சம் – 250 நபர்கள்**

- இத்திட்டத்தில் 250 பனை விவசாயிகள் / தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- 250 பனை விவசாயிகள்/தொழிலாளர்களை 50 நபர்கள் கொண்ட குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் 10 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும்.
- பயிற்சி நடைபெறும் போது தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர்கள் பார்வையிடுவர்.
- இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளை, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் உள்ள 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பனை விவசாயிகளின் ஆதார் எண் பெற்று தோட்டக்கலை

மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய அலுவலர் இணைந்து தேர்வு செய்வர்.

- இத்திட்டப் பயனாளிகளால் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனை சார்ந்த மதிப்புக் கூட்டுப் பொருட்களை மாநில / மாவட்ட சம்மேளனங்களின் கிளைகள் மூலம் சந்தைப்படுத்தப்படும்.
- இப்பயிற்சிக்கான இனவாரியான செலவின விவரம் பின்வருமாறு: -

| வ. எண் | விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | **பயிற்சியாளர்களுக்கான உதவித்தொகை**<br>ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 300/- வீதம் 10 நாட்களுக்கு (ரூ. 300 * 50 நபர்கள்* 10 நாட்கள்) | 1,50,000 |
| 2 | **பயிற்றுநர் கட்டணம்:**<br>ஒரு மையத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1500/- வீதம் 10 நாட்களுக்கு (போக்குவரத்து செலவினம் உட்பட) (ரூ.1500 * 10 நாட்கள்) | 15,000 |
| 3 | **மூலப்பொருட்கள்:**<br>பதநீர் தேவை - நாள் ஒன்றுக்கு 35 லி வீதம், 1 லி ரூ. 60 வீதம், 10 நாட்களுக்கு (ரூ. 60 * 35 லி * 10 நாட்கள்) | 21,000 |
| | **இதர மூலப்பொருட்கள்:**<br>பனை சார்ந்த மதிப்புக் கூட்டுப் பொருட்களான பனஞ்சர்க்கரை, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி அல்வா, கருப்பட்டி சாக்லேட் மற்றும் பனங்கிழங்கு மாவு போன்றவற்றை தயாரிப்பதற்கான செலவினம் நாள் ஒன்றுக்கு ரூ. 1500/- வீதம் 10 நாட்களுக்கு (ரூ. 1500 * 10) | 15,000 |
| 4 | **சிறப்பு ஆசிரியர் மற்றும் உதவியாளருக்கான கட்டணம்:**<br>Fees for special lecturer with Assistant on last day of training (Rs. 5000 + Rs. 2000 = Rs. 7000) | 7,000 |
| 5 | **எழுது பொருட்கள்:**<br>வருகைப் பதிவேடு, சான்றிதழ் அச்சடித்தல், செய்முறை விளக்கப் புத்தகம் மற்றும் இதர பொருட்கள் | 10,000 |
| 6 | பயிற்சி மையத்திற்கான கட்டிட வாடகை | 12,000 |
| 7 | **சிற்றுண்டி மற்றும் மதிய உணவு செலவினம்:**<br>ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 200/- வீதம் 10 நாட்களுக்கு (ரூ. 200 * 50 *10 நாட்கள்) | 1,00,000 |
| 8 | **பயிற்சி துவக்க விழா மற்றும் நிறைவு விழா செலவினம்:**<br>மேடை அமைத்தல், மேஜை, நாற்காலி, ஒளி ஒலி அமைப்பு, வீடியோ கவரேஜ், செய்முறைக்கான கூடம் அமைத்தல், பனை பொருட்களை காட்சிப்படுத்துதல், முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு கௌரவப் பரிசு வழங்குதல். | 60,000 |
| | **ஒரு குழுவிற்கு ஆகும் மொத்த செலவினம்** | **3,90,000** |
| | **மொத்தம்**<br>ஒரு குழுவிற்கு ரூ. 3,90,000 வீதம் 5 குழுக்களுக்கு (ரூ. 3,90,000 * 5) | **19,50,000** |

**3. பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி பெறும் மகளிருக்கு உபகரணங்கள் வழங்குதல் – ரூ. 14.514 இலட்சம் – 200 மகளிர்**

- இத்திட்டம் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் உள்ள 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பனை விவசாயிகளின் குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண் பெற்று அப்பயனாளிகளை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய அலுவலர் இணைந்து தேர்வு செய்வர்.
- இத்திட்டப் பயனாளிகளால் தயார் செய்யப்படும் பனை ஓலைப் பொருட்கள் மாநில / மாவட்ட சம்மேளனங்களின் கிளைகள் மூலம் கொள்முதல் செய்து சந்தைப்படுத்தப்படும்.
- ஒரு பயனாளிக்கு 100% மானியத்தில் ரூ.7,257/- மதிப்புள்ள பொருட்கள் வழங்கப்படும்

**வழங்கப்படும் பொருட்களின் விவரம் பின்வருமாறு:**

| வ. எண் | பொருட்களின் விவரம் | பொருளின் பயன்பாடு | எண்ணிக்கை | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஸ்டீல் கிண்ணம் Diameter 200 / 304 mm Height 234 mm | பனை ஓலையை சாயம் போடுவதற்கு பயன்படுத்தப்படும் பாத்திரம் | 1 | 2,000 |
| 2 | பனை ஓலை கட்டிங் செய்யும் கருவி | பனை ஓலையை பல்வேறு அளவுகளில் வெட்டுவதற்கு (Cutting) செய்திட பயன்படுத்திடும் கருவி | 1 | 1,500 |
| 3 | மர நாற்காலி – 1 அடி (1 x 1) (Country wood) | பனை ஓலை வெட்டும் (Cutting) செய்யும் கருவியை பொருத்திடும் (fitting) வகையில் 1 அடி நாற்காலி | 1 | 1,500 |
| 4 | ஸ்டீல் காம்பு கத்தி சிறியது (அரை அடி) | பனை ஓலை சீவிட பயன்படுத்தும் கத்தி | 1 | 300 |
| 5 | பெரிய கத்தி (1 அடி) | பனை ஓலை வெட்ட பயன்படுத்தும் கத்தி | 1 | 500 |
| 6 | பெரிய ஸ்டீல் கிண்ணம் | பனை ஓலைக் கூடை / பொருட்கள் செய்யும் போது ஓலையில் ஈரப்பதம் ஏற்படுத்திட தண்ணீர் ஊற்றி வைக்கப் பயன்படுத்தும் பெரிய கிண்ணம் | 1 | 350 |
| | GST (18%) | | | 1,107 |
| | மொத்தம் | | | 7,257 |

4. மகளிருக்கு பனை ஓலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வழங்குதல் – ரூ. 37.180 இலட்சம் -200 மகளிர்

- இத்திட்டத்தில் 200 பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- 200 பெண்களை, 25 நபர்கள் கொண்ட குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் 25 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளை, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் உள்ள 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பனை விவசாயிகளின் ஆதார் எண் பெற்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய அலுவலர் இணைந்து தேர்வு செய்வர்.
- இத்திட்ட பயனாளிகளால் தயார் செய்யப்படும் பனை ஓலைப் பொருட்கள் மாநில / மாவட்ட சம்மேளனங்களின் கிளைகள் மூலம் கொள்முதல் செய்து சந்தைப்படுத்தப்படும்.
- பயிற்சி நடைபெறும் போது தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர்கள் பார்வையிடுவர்.
- பயிற்சி பெற்ற பெண்கள் சுயமாகத் தொழில் செய்திட ஊக்குவிக்கப்படுவர்.

**இப்பயிற்சிக்கான இனவாரியான செலவின விவரம் பின்வருமாறு: -**

| வ. எண் | விவரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | **பயிற்சியாளர்களுக்கான உதவித்தொகை:**<br>ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 250/- வீதம் 25 நாட்களுக்கு (ரூ.250 * 25 நபர்கள் * 25 நாட்கள்) | 1,56,250 |
| 2 | **பயிற்றுநர் கட்டணம்:**<br>ஒரு மையத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 600/- வீதம் 25 நாட்களுக்கு (போக்குவரத்து செலவினம் உட்பட) (ரூ.600 * 25 நாட்கள்) | 15,000 |
| 3 | **மூலப்பொருட்கள்:**<br>பனை ஓலை, சாயம், எரிபொருள் மற்றும் இதரம், ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 120 /- வீதம் 25 நாட்களுக்கு (ரூ. 120 * 25 *25 நாட்கள்) | 75,000 |
| 4 | **சிறப்பு ஆசிரியர் மற்றும் உதவியாளருக்கான கட்டணம்:**<br>Fees for special lecturer with Assistant on last day of training (Rs. 6,000 + Rs. 2,000 = Rs. 8,000) | 8,000 |
| 5 | **எழுது பொருட்கள்:**<br>வருகைப் பதிவேடு, பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அச்சடித்தல், எழுதுபொருட்கள் மற்றும் இதர பொருட்கள். | 4,500 |
| 6 | பயிற்சி மையத்திற்கான கட்டிட வாடகை | 11,000 |
| 7 | **சிற்றுண்டி மற்றும் மதிய உணவு செலவினம்**<br>ஒரு நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ. 200/- வீதம் 25 நாட்களுக்கு (ரூ.200 *25 *25 நாட்கள்) | 1,25,000 |

| | | |
|---|---|---|
| | **பயிற்சி துவக்க விழா மற்றும் நிறைவு விழா ஆகியவற்றிக்கான செலவினம்.**<br>மேடை அமைத்தல், மேஜை, நாற்காலி, ஒளி ஒலி அமைப்பு, வீடியோ கவரேஜ், செய்முறைக்கான கூடம் அமைத்தல், பனை பொருட்களை காட்சிப்படுத்துதல், முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு கௌரவப் பரிசு வழங்குதல். | 70,000 |
| | **ஒரு குழுவிற்கு ஆகும் மொத்த செலவினம்** | **4,64,750** |
| | **மொத்தம்**<br>ஒரு குழுவிற்கு ரூ. 4,64,750/- வீதம் 8 குழுக்களுக்கு<br>(ரூ. 4,64,750 * 8) | 37,18,000 |

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

19/5/25
பிரிவு அலுவலர்

19/5/25